2015 செப்டம்பர் 3]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஊராட்சியைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தீர்மானம் இயற்றப்படும்பொழுது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கூட்டம் நடத்தப்படும்பொழுது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சென்றிருப்பார்கள். அப்படி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கலந்துகொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டால், இயக்குநர் அவர்கள் அதுகுறித்து முடிவு செய்து அரசுக்குக் கருத்துரு அனுப்பியிருந்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன். சட்டமன்றத்தில் அறிவித்தால்கூட, அதற்கு என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றன என்பதை நான் ஏற்கெனவே இங்கே தெரிவித்தேன். அந்த விதிமுறைகளின்படி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குக் கருத்துரு வரப்பெற வேண்டும். கருத்துரு வரப்பெற்ற பிறகுதான் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

பகுதிநேர கால்நடை கிளை நிலையம்

*7357—**திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், திருவாடுதுறை கிராமத்தில் பகுதிநேர கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2015 செப்டம்பர் 3

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பூம்புகார் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், திருவாடுதுறை கிராமத்தில் பகுதிநேர கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கால்நடைகளின் நலன் கருதி, ஏற்கெனவே அங்கு ஒரு கால்நடை பார்வை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. வருங்காலத்திலே கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாகும் நேரத்திலே, அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்றின் பசியறிந்து உணவூட்டும் பசுவைப்போல, தமிழக மக்களின் மனமறிந்து செயலாற்றும் அன்னையே; (மேசையைத் தட்டும் ஒலி) முக்காலமும் உணர்ந்து தமிழக மக்களுக்குப் பொற்காலம் படைத்துக் கொண்டிருக்கும் எங்கள் தாயே; சகரன், காரி, நளன், தந்துமாரி, நிருதி, செம்பியன், விடாரன் என முதல் ஏழு வள்ளல்களையும், அக்குரன், அந்திமான், கர்ணன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன், சந்தன் போன்ற இடை ஏழு வள்ளல்களையும், பாரி, காரி, ஓரி, அதியமான், பேகன், நள்ளி, ஆய் அண்டிரன் ஆகிய கடையேழு வள்ளல்களையும் நாங்கள் கண்டதில்லை அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே எட்டாவது வள்ளலாக வீற்றிருக்கும் புரட்சித் தலைவி என்ற எட்டெழுத்து நிகழ்கால வள்ளல் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் புரட்சித் தலைவி தாங்களே அம்மா என்று அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பூம்புகார் தொகுதி, குத்தாலம் ஒன்றியத்திற்குட்பட்ட திருவாடுதுறை ஊராட்சியில் கால்நடை பார்வை கிளை நிலையம் மட்டும் உள்ளது. கால்நடை கிளை நிலையமாகத் தரம் உயர்த்தித் தரப்படும்

2015 செப்டம்பர் 3]

என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அமைப்பதற்கு உத்தரவிட்ட வாயில்லா ஜீவனையும் வாழவைக்கும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியினை என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட காளப்பன்பட்டி, கல்யாணிப்பட்டி, விங்கப்பனூர் மற்றும் கொடிக்குளம் பகுதிகளில் அதிகமான கால்நடைகள் இருக்கின்றன. அந்த மக்களும் நீண்டநாட்களாக, அந்தப் பகுதியிலே கால்நடை மருத்துவமனை தேவை என்பதை பல முறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தருவார்களா என தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமானால், ஏற்கெனவே இருக்கின்ற கால்நடை கிளை நிலையத்திற்கும், கேட்கின்ற கிராமத்திற்கும் மூன்று கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. அதேபோல, 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். 3,000 கால்நடை அலகுகள் என்று சொன்னால், 3,000 கால்நடைகள் அல்ல. ஒரு பசு மாடு ஒரு அலகு; ஒரு எருமை மாடு ஒரு அலகு; 10 ஆடுகள் ஒரு அலகு எனக் கணக்கிடப்படுகிறது. 100 கோழிகள் ஒரு அலகு என்று கணக்கிடப்படும். இப்படி அந்த விதிப்படி 3,000 அலகுகள் இருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடங்களிலே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று, கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*